| இங்கு அரச இலச்சினையை பொருத்தவும். | **நீதி, பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் தொழிலாளர் அமைச்சு**<br>**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்.** | |
|---|---|---|

**அலுவலக கட்டடங்களை வாடகை அடிப்படையில் பெறுவதற்கு விலைமனு கோரல்**

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பின்வரும் நகரங்களில் உள்ள கிளை அலுவலகங்களை பராமரிப்பதற்குப் பொருத்தமான கட்டடங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு விலைமனு கோரப்படுகின்றது.

| | கிளை அலுவலகம் | சதுர அடி |
|---|---|---|
| 01 | திருகோணமலை மாவட்ட நிலையம் | 3000 -3500 ற்கிடையில் |
| 02 | மட்டக்களப்பு மாவட்ட நிலையம் | 3000 -3500 ற்கிடையில் |
| 03 | கிழக்கு மாகாண புலம்பெயர் வள நிலையம் - அம்பாறை | 3000-3500 ற்கிடையில் |

**1. கட்டடம் தொடர்பாக பூரணப்படுத்த வேண்டிய தகைமைகள்**

அ. இக் கட்டடங்ளை மாதாந்த வாடகை அடிப்படையில் வழங்க வேண்டும்.

ஆ. பொதுப் போக்குவரத்து வசதிகளைப் பயன்படுத்தி எளிதில் பயனடையக் கூடிய பகுதியில் இக் கட்டடம் அமைய வேண்டும்.

இ. குறைந்தது 05 வாகனங்களை நிறுத்தக் கூடியவாறு இட வசதி காணப்பட வேண்டும்.

ஈ. மும்முனை மின்சாரம் வழங்குவதற்கு தனி மின் மீட்டர் மற்றும் மின்தடை ஏற்பட்டால் பயன்படுத்த ஜெனரேட்டர் காணப்பட வேண்டும் என்பது மேலதிக தகைமை ஆகும்.

உ. நேரடி நீர் குழாய் இணைப்புடன் ஒரு தனி நீர் இருக்க வேண்டும் மற்றும் கட்டடத்தில் 2000 L தண்ணீர் சேமிக்கும் திறன் கொண்ட நீர் தொட்டி / தொட்டிகள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

ஊ. நிலையான தொலைபேசி வசதி காணப்பட வேண்டும்.

எ. பிரதான மின் விநியோக வாரியத்துடன் கூடிய முக்கிய மின்சுற்று அமைப்பு மின் விசிறி மற்றும் பிற சாதனங்களுடன் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

ஏ. இடம் தெரிவு செய்தமை அறிவிப்புச் செய்யப்பட்ட பின்னர் கட்டட வேலை முடிக்கப்பட்டு 2 கிழமைகளுக்குள் கிடைக்கக் கூடியதாகக் காணப்பட வேண்டும்.

ஐ. சேவைகளைப் பெற வரும் சுமார் 10 வாடிக்கையாளர்கள் ஒரே நேரத்தில் அமர்ந்து தங்கள் பணிகளை மேற்கொள்ளக் கூடியவாறு இடவசதி காணப்பட வேண்டும்.

ஒ. ஏறக்குறைய 30 பயிற்சியாளர்களுக்கு ஒரே நேரத்தில் வகுப்புக்களை நடத்தக் கூடிய 400 சதுர அடியில் 02 விரிவுரை அரங்குகள் காணப்பட வேண்டும்.

ஓ. தண்ணீர் மற்றும் கழிவுநீர் அமைப்புக்கள் ஒழுங்காக அகற்றக் கூடியதாக கட்டடங்கள் அமையப் பெற வேண்டும்.

ஔ. ஊழியர்கள் மற்றும் வெளி தரப்பினர் பயன்படுத்த 06 தனி கழிவறைகள் காணப்பட வேண்டும்.

க. அறைப் பிரிப்பு மற்றும் கணனிப் பயன்பாட்டிற்குத் தேவையான இணையத்தள வசதிகளை பணியகத்திற்குத் தேவையான வகையில் செய்யக் கூடியதாக இருத்தல்.

ச. காரியாலய செயற்பாடுகளால் சுற்றியுள்ள குடியிருப்பாளர்களுக்கு இடையூறு இல்லாத வகையிலும் சுற்றியுள்ளவர்களால் காரியால செயற்பாடுகளுக்கு இடையூறு இல்லாத வகையிலும் அமைய வேண்டும்.

ட. குளிரூட்டல் அமைப்பு (Air Conditioner System) காணப்படுதல் மேலதிக தகைமை ஆகும்.

த. ஊழியர்களுக்காக தங்குமிட வசதிகள் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருப்பதுடன் வேறாக்கப்பட்ட அறைகள் கழிவறைகளுடன் கூடியதாக இருக்க வேண்டும் மற்றும் அதற்காக வேறாக்கப்பட்ட நுழைவாயில் காணப்பட வேண்டும் அல்லது இப் பிரதேசத்திலேயே கட்டடம் அமைந்திருப்பது மேலதிக தகைமை ஆகும்.

ப. வாடகைதாரர் விண்ணப்பிக்கும் மாதாந்த வாடகை அரசாங்கத்தின் மதிப்பிடப்பட்ட தொகைக்கு உட்பட்டு செலுத்தப்படும். ( குறைந்தபட்ச தொகை)

**2. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் பிரதிகளை கட்டட உரிமையாளர் சமர்ப்பிக்க வேண்டும்.**

1. விலைப் பட்டியலுடன் பணியகம் வழங்கிய கேள்வி மனு ஆவணம்.
2. மாத வாடகைத் தொகையைக் குறிப்பிடும் கடிதம்
3. வரிக்கு உட்பட்ட சொத்தின் சரியான முகவரி
4. கட்டட உரிமையாளரின் சான்றளிக்கப்பட்ட உரிமைப் பத்திரம் மற்றும் அதற்கு தொடர்புடைய சமீபத்திய ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட பிரதி.
5. சொத்து தொடர்பான ஆவணம்.
6. அங்கீகரிக்கப்பட்ட கட்டடத்தின் சான்றளிக்கப்பட்ட திட்டம் ( சம்பந்தப்பட்ட கட்டடத் திட்டத்தின் A4 அளவு அல்லது A3 அளவுக்குள் அடக்கப்பட்ட பிரதி)
7. வாடகையாளரின் பெயர் / முகவரி /தேசிய அடையாள அட்டையின் தெளிவான புகைப்படம்
8. கட்டட உரிமையாளரின் தொலைபேசி இலக்கம்.
9. இணக்கச் சான்றிதழ்
10. கடந்த 6 மாதங்களுக்குள் பெறப்பட்ட மின்சாரம், தொலைபேசி, வரி முதலிய கட்டணங்களின் பிரதி.
11. வாடகைக்கு விடப்படும் சொத்துக்கான உரிமை அறிக்கை பரம்பரையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அது பிரதேச வழக்கறிஞரால் தயாரிக்கப்பட்டு இறுதியாக அவரது பரிந்துரையுடன் சமர்ப்பிக்க வேண்டும்.
12. வாடகைக்கு விடப்படும் சொத்து தொடர்பாக தனிப்பட்ட உரிமை மட்டும் காட்டப்படாத சந்தர்ப்பங்களில், அதாவது சொத்தின் முழு உரிமையாளராக இலங்கை குடியரசாக இருக்கும் சந்தர்ப்பங்களில் ( ஸ்வர்ணபூமி/ ஜயபூமி/ பிரதான பத்திரம் / 30 வருட வாடகையில் பெறப்பட்ட நிலம்) என்பன சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளரின் அனுமதிக் கடிதத்துடன் சமர்ப்பித்தல் அவசியமாகும்.

இது தொடர்பாக பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடாக மாத்திரமே தெளிவு பெற வேண்டும் என்பதுடன், இடைத்தரகர்கள் அல்லது வேறு ஏதேனும் அதிகாரி அல்லது வெளித் தரப்பினருடன் ஒப்பந்தங்களைச் செய்வது இந்த ஏலத்தை நிராகரிக்கும்.
இல. 234, டென்ஸில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்ல எனும் மகவசரியிலுள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் இரண்டாவது மாடியிலுள்ள கொள்முதல் பிரிவிலுள்ள டென்டர் பெட்டியில் 2024.10.29 ஆம் திகதி மு.ப 11.00 அல்லது அதற்கு முன்பாக இடுதல் வேண்டும். உங்கள் விண்ணப்ப உறையின் மேல் மூலையில் “வாடகை அடிப்படையில் / குத்தகை அடிப்படையில் கட்டடத்தை கொள்முதல் செய்தல் **PR/02/04-01”**. எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
பணியகத்தின் கொள்முதல் பிரிவு எந்த விண்ணப்பத்தையும் நிராகரிக்க அல்லது ஏற்றுக் கொள்ளும் உரிமையைக் கொண்டுள்ளதுடன் கொள்முதல் பிரிவின் முடிவே இறுதி முடிவாகும். ஆரச மதிப்பீட்டாளர்களின் அறிக்கைகளுக்கு உட்பட்டே தெரிவு செய்யப்படுகின்றன.
மீளப் பெற முடியாத ரூ. 1000.00 தொகையை பணியக இலங்கை வங்கிக் கணக்கில் 0000001650 வைப்பிலிட்டு பற்றுச் சீட்டினை பின்வரும் முகரிகளில் உள்ள காரியாலயங்களுடாக செலுத்தி 2024.10.07 ஆம் திகதி முதல் 2024.10.28 ஆம் திகதி வரை காரியாலய நேரத்தில் ஏல ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

| | கிளை அலுவலகம் | முகவரி |
|---|---|---|
| 01 | திருகோணமலை மாவட்ட நிலையம் | No.697/B,NC Rd, Murugapuri,Trincomalee. |
| 02 | மட்டக்களப்பு மாவட்ட நிலையம் | No.12, Pioneer Road, Batticaloa. |
| 03 | கிழக்கு மாகாண புலம்பெயர் வள நிலையம் - அம்பாறை | No. 651, Uhana road, Ampara |

| | |
|---|---|
| தலைவர் - கொள்முதல் பிரிவு<br>இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்,<br>இல. 234, டென்ஸில் கொப்பேகடுவ மாவத்தை,<br>கொஸ்வத்த, பத்தரமுல்ல<br><br>தொலைபேசி / பக்ஸ் : 2880550/2887585<br>இணையத்தளம் : www.slbfe.lk | **அக்கரையில் மாண்புற இக்கரையில் கைகோர்ப்போம்** |